ௐ

# இந்து சாதனம்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

| பத்திரிகை கிரயம். | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு ரூ | 5-00 |
| இலங்கை, இந்தியா: ” ரூ. | 8-00 |
| தொலைப்பகுதி: ” ரூ. | 9.00 |
| தனிப்பிரதி: | சதம் 5 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

உ

சீர்பூத்த கருவிநா வணர்ச்சி தேங்கச், சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப், பாம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவாகமத்தத் தினிது தாங்கப், பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்தவறிவிச்சைதொழிலென்றோது, மதம்பூத்தவிநாயகன் றன்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக,
ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

[‘ரெலிபோன்’ இல. 56.]

| விளம்பர விகிதம். | | |
|---|---|---|
| முதன்முறைக்கு:—ஒருகலம் | | ரூ 10-00 |
| ” | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ” | கால்கலம் | ரூ. 3-00 |

அடுத்த முறைகட்கு மேல் விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பணம் அனுப்பினலன்றிப் பிரசுரிக்கப்படா.

புத்தகம்—சச. } யாழ்ப்பாணம்; - ஆங்கிரசஸு ஆடிமீ ௧௭உ, (1932 ஆகஸ்ட் 1) திங்கட்கிழமை { இலக்கம்—௬.

“எனைத்தானு நல்லவை கேட்க அனைத்தானும்,
ஆன்ற பெருமைதரும்”

## ஓர் புதிய மதம்.

[ஸ்ரீமத் சுவாமி தேவாத்மானந்தா அவர்கள் “பிரபுத்தபாரத”ப் பத்திரிகையில் எழுதியதன் மொழிபெயர்ப்பு.]

(28-7-32-ன் தொடர்ச்சி)

விஞ்ஞான சாஸ்திரமே சமயத்திற்கு மிகப் பகையாயுள்ளது என மக்களிற் பலர் தற்போது அபிப்பிராயப்படுகிறார்கள். சமயத்தை நசிக்க, அதன் செல்வாக்கைக் குறைக்க முன்வந்த சாதனங்களுள் விஞ்ஞான சாஸ்திரமே மிக்க கெடுதியானது என்பதே தற்போதைய மக்கள் பலரின் கொள்கை. சமயக்கொள்கைகளிற் பல சாஸ்திரசம்பந்தமானவையல்ல என்று விஞ்ஞானசாஸ்திரிகள் கூறுவதால் சமயமானது மிக்க கேவல நிலைமையில் வந்துவிட்டது என்பது இம்மக்களின் சித்தாந்தம். ஆனால் இப்படியாக விஞ்ஞானசாஸ்திரிகளைக் கண்டிப்பது முற்றாகச் சரியல்ல. உலோகாயுதரும், நிரீச்சுரவாதிகளும் விஞ்ஞான சாஸ்திரிகளும் ஒரு கட்சியாளரே யென்று நாம் தப்பபிப்பிராயம் சிற்சில சமயங்களிற் கொள்கிறோம். உண்மை யதுவல்ல. விஞ்ஞானசாஸ்திரிகள் யாவரும் உலோகாயுதரல்ல. உலோகாயுதர் எல்லாரும் விஞ்ஞானப் புலவருமல்ல என்பதை நாம் ஞாபகத்தில் நன்கு பதித்துக்கொள்ள வேண்டும். விஞ்ஞானப் புலவர்களுள் அநேகர் பெரும் சமய பக்தர்களாக விருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கும், சமயத்தில் மூடநம்பிக்கைகொண்டு வாழ்க்கையை நடாத்துபவர்களுக்கும் ஒருபெரும்பேதம் இருக்கிறது. விஞ்ஞானப்புலவர் ஓர் விஷயத்தை அது சமயமாயினும்சரி, வேறெதுவாயினும்சரி ஐயந்திரிபற அறியவேண்டும் என விரும்புவார்கள். ஓர் மதக்கொள்கை நியாயமானதா, அதைப் பின்பற்றினால் ஆம்பயன் என்னஎன்பதைத் தீர்க்கமாய் ஆலோசிப்பார்கள். சுருதி யுத்தி அநுபவம் என்பனவற்றிற்கு அம்மதக்கொள்கை உடன்பாடுடையதா யிருக்கிறதா என்பதை அவர்கள் பார்ப்பார்கள். தற்போது கைக்கொள்ளப்படும் மதத்தின் முக்கியமான கொள்கைகள் சாஸ்திரசம்மதமற்ற சில கிரியைகளையே மூலாதாரமாகக் கொண்டுள்ளன என்பதை அவர்கள் அறியும்போது அவர்கள் அக்கொள்கைகளில் மனஞ் சலித்து விடுகிறார்கள். இத்தக் கொள்கைகளினால் எம் மனம் சாந்தியடையமாட்டாது என அவர்கள் பெருமூச்சு விடுகிறார்கள். ஒருமதக்கொள்கை நியாயமற்றது, சாஸ்திரசம்மதமற்றது என்று அவர்கள் அதிருப்தியடைந்திருப்பதையிட்டு, அவர்கள் நிரீச்சுரவாதிகள் அல்லது உலோகாயுதர் என்று சிலராற் கண்டிக்கப்படுகிறார்கள். அக்கொள்கைகளையிட்டு இவர்கள ஆசங்கை நிகழ்த்துவது பெரும் பாவம் எனச் சிற சிலர் எண்ணி அவர்களை வெறுக்கிறார்கள்.

எனினும் இவற்றையெல்லாம் ஒருவாறு சரிப்படுத்துவதற்காகத் தற்போது பல மதபோதகர்கள் முன்வந்திருக்கின்றனர். அவர்கள தத்தம் சமயங்களில குறைவுற்றனவாயும் நன்மைபயக்காதனவுமா யுள்ள சில கொள்கைகளை மறைத்து, தத்தம் சமயத்தை ஒருவாறு நிலைநிர்த்தப்பண்ணுவதற்கான பிரயத்தனங்கள் செய்கின்றனர். சென்ற 100 வருஷங்களுக்குள்ளும் விஞ்ஞானசாஸ்திரம் மிக்க முன்னேற்றம் அடைந்திருக்கிறது. அதன பலனாகக் கிறிஸ்துமதமும் ஓர் நல்ல பாடம் படித்திருக்கிறது. “நன்மைபயக்காதனவாகிய பழையகொள்கைகளிற் பலவற்றை எமது கிறிஸ்துமதம் கழித்துவிட்டது. கல்வியறிவுள்ள கிறிஸ்துவர் கப்பர்ணிக்கஸ் (Copernicus) கலிலியோ (Galilleo) நியூற்றன் (Newton) முதலாம் விஞ்ஞானப் புலவரின் கொள்கை சரியானவை யென்று ஏற்றிருக்கின்றனர். இதுமாத்திரமா? கல்வியறிவுள்ள தற்காலக் கிறிஸ்தவன் டார்வின் (Darwin) ஜீன்ஸ் Jeans) எடிங்றன் (Eddington) முதலாம் அறிஞர்களின் கொள்கைகளையும் அங்கீகரிக்கின்றான். மேற்கூறப்பட்ட சாஸ்திரிகளின் கொள்கைகளை முன்னர் கிறிஸ்தவர் அங்கீகரிக்கப் பின்வாங்கினர். இப்போது அவர்கள் ஜர்மனியஞானியாகிய ஐன்ஸ்ரின் (Einstein) என்பாரின் கொள்கைகளைத்தானும் ஏற்பார்கள் போற்றோன்றுகிறது. பரமண்டலம், நரகம்என்ற இரு இடங்கள் உண்டு என்ற கொள்கையை இப்போது கிறிஸ்தவர் கைநெகிழவிட்டனர். அப்படிக் கைநெகிழ விடுவதனால் ஆம்பலன் என்ன என்பதை அநேகமாக உணராமலே இவர்கள இவ்வாறு விட்டுக் கொடுத்தனர் § என்று லண்டன் செயிற் போல் தேவாலயத்துக் குருவரான டக்ரர் இன்ஜ் அவர்கள் கூறுகிறார். சமயம் சரியென அங்கீகரித்தாலென், அங்கீகரிக்காது விட்டாலென், விஞ்ஞானசாஸ்திராராய்ச்சியாற் கண்டுபிடிக்கப்பட்டனவாயும தம்பயனை ஒருபோதும் இழக்கா. அவை எப்போதும உண்மையாயிருக்கும். அவற்றைக்கெடுக்க மூடநம்பிக்கையால் முடியாது என்பதை நாம் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். ஓர் சமயமானது சாஸ்திர சம்மதமானது; அதன் கொள்கைகள பயனைவிளைக்கும் என விஞ்ஞானப்புலவர் சும்மா கூறுவதால் மாத்திரம ஒரு சமயம் மேனிலையை அடையாது. விஞ்ஞான சாஸ்திரத்திற்கும் மதங்கட்கும் இப்போது ஓர் பெரும்போர் நடக்கின்றது எனச் சொல்லலாகும். இத்தப்போரில் சமயமானது எதிர்த்து, அதன் கொள்கைகள் சாஸ்திர சம்மதமானது என்பதை வெட்ட வெளியாய்க் காட்டவேண்டும். இதனையிட்டுத்தான பேர்மிங்ஹாம் அத்தியக்ஷரான றெவரன்ட் E W பார்ண்ஸ் அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்.

“சமய சம்பந்தமாக இதுகாறும் கைக்கொள்ளப்பட்டு வந்த பழைய கொள்கைகளிற் பல இப்போது கைவிடப்பட வேண்டும் எனபதை நான் வெளியாக எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அக்கொள்கைகள் விஞ்ஞான சாஸ்திரிகளின கேள்விகளுக்கிணங்கவில்லை. எனவே அவை கைவிடப்படவேண்டும். 15-வது நூற்றாண்டின் கடைசிப் பாகத்தில்நடந்த சமயக் கிளர்ச்சிக்குப் பின சமயமும் விஞ்ஞானசாஸ்திரமும பேர் பொருதிக்கொண்டே வந்திருக்கின்றன. இவ்வொரு போரிலும், விஞ்ஞான சாஸ்திரமே வெற்றிபெற்றிருக்கிறது என்பது உண்மை.”

இதில் இருந்து நாம் அறியக்கூடியது என்னவென்றால் மதக்கொள்கைகள் யாவும், தமக்கெதிரே வரும் புதிய புதிய விஞ்ஞானசாஸ்திர ஆராய்ச்சிக் கொள்கைகளுக் இடங்கொடுக்காது எதிர்த்து, தம உயர்ந்ததன்மையைக் காட்டவேண்டுமென்பதே. (தொடரும்)

§ Science and Religion-a Symposium.

[பதிப்புரிமை ஆசிரியருக்குரியது.]

## இராமாயணம்
## ஆரணிய காண்டம்.

### முதல் அங்கம்.

*எட்டாங் காட்சி.

காலம்—பிற்பகல். இடம்—கோதாவரிநதிக்குச் சமீபமாகவுள்ள பஞ்சவடி

[ஸ்ரீராமபிரான், இலக்குமணர் அமைத்த பன்னசாலையில் ஒரு புறத்தே ஏகாந்தமா யிருக்கின்றார். அச்சமையத்தில் இராவணனுக்கும் குபேரனுக்கும் இளையவளும், விபீஷணனுக்கு மூத்தவளும், பஞ்சமாபாதகங்களையும் அஞ்சாது செய்பவளும், தன் மூத்தோர்போன்ற பேராற்றல் படைத்தவளும், ஜனஸ்தானமென்ற இடத்திற்கு அரசியும், கணவனையிழந்தமையாற் கைம்மையும், தேவர் முனிவருக்கு இடுக்கண்செய்த கொடியவளும், நெறியற்றவளுமாகிய சூர்ப்பணகை அங்கே வருகின்றாள்.]

சூர்ப்பணகை: (ஸ்ரீராமர் இருப்பதைத் தூரத்தே வரும்போது கண்டு) இந்த வனத்தில் இது என்ன அபூர்வமானகாட்சி; இதற்கு முன்னரும் எத்தனையோமுறை இந்த இடத்திற்கு வந்திருக்கின்றேன்; ஆனால் இப்படியான மனோகரமானகாட்சி என் கண்களுக்கு ஒருபோதும்புலப்பட்டிலது; இப்புருஷோத்தமன் தவக்கோலம் புனைந்துள்ளான்; ஆனால் இவன் உண்மையான தபசியல்லன்; ஈசன் நெற்றிக்கண்ணாற் பொடியான அநங்கன் அந்த இறைவனருள்பெற்று, இனிமேல் எம்போன்ற மகளிரை வருத்த வொண்ணாதென நினைத்து இங்ஙனம் தவம் முயல்கின்றானோ, இல்லை, இல்லை; அப்படி நான் நினைப்பது தவறு; மன்மதனிடத்தும் இப்படியான பேரழகு இல்லையல்லவா. மும்மூர்த்திகளுள் ஒருவர்தான் ஏதோ காரணத்தால் இவ்வாறான வடிவுகொண்டிருத்தல் வேண்டும். அம்மம்ம, அழகுக்கோர்எல்லையுண்டோ! இல்லை, இல்லை! என் போல்வார்க்கு இப் புருஷோத்தமனுடைய பரிசனங் கிடைப்பது அரிது; ஆதலாற் சிறிது சமீபத்திற்சென்று கண்ணாரத் தரிசனமாயினுஞ் செய்வேன்;...... ஆனால், இந்த அரக்கி வடிவத்தோடு என் மனத்தைஉருக்கும் இப்புண்ணியபுருஷன் முன்நண்ண வொண்ணாது; இக்கோரரூபத்தைக் காண்பனேல் இவன் எழுந்து எங்கேனும் நடந்திடுவான். பிரமன் எனக்குக் கொடுத்த வரத்தினால், நான் ரதியும் நாணும் ஒரு மோகினிவடிவத்தை இப்பொழுதே கொள்ளுகிறேன்.

(சிறிது நேரம் மறைந்து பின் அழகிய தெய்வ மகளென வெளிப்படுகின்றாள்.)

ஐயையோ, இது என்ன விபரீதம்! நான் இப்பொழுதுகொண்டுள்ள இந்த மோகினி வடிவத்தினால் இவ்வுத்தமனை என்வசப் படுத்தலாமென எண்ணினேன்; நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்தவாறாயிற்றே; என்சிந்தையான அது என்னையறியாது முந்தியே அவனிடத்திற் சென்று சிக்கிக்கொண்டதே; இனி இதனை நான் மீட்டு என்னிடத்திற்கு மீண்டுசெல்வதெப்படி! நான் இச்சுந்தர புருஷனிடம் நேரிற்சென்று அவன் வசப் பட்டுள்ள என்சிந்தையை மீட்டுத்தரும்படி மெல்லக்கேட்பேன்; திரிலோகங்களுக்கும் இறைவனாகிய இராவணேசுரனுக்குத் தங்கையென விருக்கும் நான் இன்னமும் நின்று யோசிக்கவேண்டுமா! அண்ணன்பெயரைக்கேட்பின் விண்ணவரெல்லாம் நடுங்குவரல்லவா......மனமே, சஞ்சலப்படாதே; அஞ்சாதே; இராவணன் றங்கையால் இயலாதகருமமுமொன்று இதுவரையிலுண்டா.

(மெல்ல மெல்லச் செல்கின்றாள்; சிலம்பு கலம்பு, மேகலை புலம்பு அவள் இராமபிரானுக்குச் சமீபமாகச்செல்ல இராமர் அவளைக் காண்கின்றார்).

இரா: இது என்ன அற்புதம்! தேவலோகம் இந்தப்பஞ்சவடிவுக்குச் சமீபத்திலுள்ளதா! ஆரிடத்தடங்கும், அம்ம, அழகிற்கோர் அவதியுண்டோ, இம்மெல்லிநல்லாள் இம் மண்ணுலக மகளல்லள்; இவள் விண்ணுலக மகளோ, இல்லையேல் வனதேவதையோ, சரி, இவள் ஒருவர் இல்லாளை யாமாகில், நாம் இவளைப்பார்ப்பதுந் தோஷமல்லவா. ஏ, மனமே பிறிதொன்றிற் செல்லாதே.........

(இதற்கிடையில் சூர்ப்பணகை அன்னமென நடந்து மயிலென ஒல்கி ஒருபுறத்தே மிக்க நாணத்துடன் தன் காற்பெருவிரலைப் பார்த்தபடி நிற்கின்றாள்)

இரா: பெண்ணே, நின்வரவு நல்வரவாகுக, உன்னையொத்த உத்தமிகள் எங்கள் ஆச்சிரமத்திற்கு வருதல் நாஞ்செய்த புண்ணியத்தின் பயனாம். மட நல்லாய், உமது ஊர் எது? பெயரென்ன? உமக்குரியவர் யார்? சொல்லவொண்ணாதா?

சூர்ப்ப: (புன்முறுவலரும்ப) சொல்லுகின்றேன்:

“பூவிலோன் புதல்வன் மைந்தன்
  புதல்வி முப்புரங்கள் செற்ற
சேவலோன் துணைவ னான
  செங்கையோன் தங்கை திக்கின்
மாவெலாந் தொலைத்து வெள்ளி
  மலையெடுத் துலகமூன்றுங்
காவலான் பின்னை காம
  வல்லியாங் கன்னி யென்பேர்.”

பிரமதேவருடைய புதல்வர் புலத்திய முனிவர், அவருடைய புத்திரன் விச்சிரவசு, அந்த விச்சிரவசுவன்மகளாவேன்; அரனுடைய தோழனாகிய குபேரனுக்கும் கைலையங்கிரியைப் பேர்க்கமுயன்ற புயவலி கொண்ட ராவணேசுவரனுக்குந் தங்கை; என்னைக் காமவல்லியென்று சொல்லுவார்கள்.

இரா: (தனக்குள்) இவள் அரக்கனாகிய இராவணனுடைய தங்கை யென்கின்றாள்; அரக்கர் குலத்திற் பிறந்த இவளுக்கு இப்பேரழகு எப்படி அமைந்தது; இவள் சொல்வதிற் சந்தேகம் பிறக்கின்றது; காரிகை யாருடன்பேசினும் விபரீதமுண்டாகுமென்பர். ஆனாலும் தானாக வந்த இவளை யாரென அறிதல் பிழையல்ல; (அவளை நோக்கி) அரிவையே, நீ இராவணன் தங்கையெனத் தெரிவித்தனை, அரக்கர் மகளாகிய உனக்கு இப்பேரழகு வாய்ந்தது எவ்வாறு?

சூர்ப்: நான் அரக்கர் குலத்தில் ஜனித்தேனாயினும் அவர்கள் ஆசாரத்தை விடுத்துப் புண்ணியமே சிறந்ததென்பதை அறிந்து இவ்வனத்தின்கணுள்ள முனிவர்கட்குத் தொண்டியற்றி அவர்களுடைய அருளாலும் ஆசியாலும் இவ்வுருப்பெற்றேன், தீவினையற்றேன், நல்வினையுற்றேன்.

(தொடர்ச்சி 3-ம் பக்கம்.)

* சென்ற திங்கட்கிழமை பிரசுரத்தில் ஏழாங் காட்சியென் றிருக்கவேண்டியது தவறாக ஆறாங்காட்சியென்றிருப்பதைத் திருத்திக் கொள்க.

## இந்துசாதன ஆலயம்.

ஆடி அமாவாசையின் பொருட்டு இவ்வாலயத்திலுள்ள ரெல்லார்க்கும் விடுதலை யுதவுதலால் நாளைக்கு (2-8-32) இந்துசாதன ஆலயத்தில் எவ்வகையான கருமமும் நடைபெறு.

மனேஜர்.

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: அங்கிரசஹு ஆடிமீ˘ 17௳ திங்கட்கிழமை.

## கூலியைக் குறைத்தல்வேண்டும்.

இக்காலத்தில் தொழின்முட்டு, பணப்பஞ்சம், உத்தியோகப்பஞ்ச மென்னும் இவைகள் அதிகப்பட்டு வருகின்றனவேயல்லாமல், உணவுப்பொருள்களும் உடைக்காகிய சகல பொருள்களும் மலிந்துள்ளன என்பதும், சீவியச் செலவு மிகவும் குறைந்திருக்கிற தென்பதும் எவருமறிந்த விஷயமாகும். இனி உத்தியோகத்தர் வேதனம், உபாத்தியாயர்கள் வேதனம், வியாபார சமுதாயங்களில் உத்தியோகம் வகித்திருப்போர் சம்பளம் எல்லாம் குறைக்கப்படலாயின இன்னமுங் குறைக்கப்படாமலிருப்பன, படிக்கும் பிள்ளைகளின் பள்ளிக்கூடச் சம்பளம், அரசினர் சனங்கள்மீது இடும் வரிகள், வேலை செய்வோரின் நாட்கூலி முதலிய சிலவேயாதும். இவைகளுள் பள்ளிக்கூடச்சம்பளம் அரசினர் விதிக்கும்வரியென்னுமிவைகளைப்பற்றி நாம் இப்பொழுது எதுஞ் சொல்ல வரவில்லை. வேலை செய்வோருடைய நாட்கூலியே இச்சமையத்தில் எவ்வகையான முயற்சிக்கும் நாடு சிறிது நன்னிலையிலிருப்பதற்கும் பெரும் இடையூறாக நிற்கின்றது.

யாழ்ப்பாணத்திலே இப்பொழுதும் நாள் வேலை செய்வோருக்குக் கொடுக்கப்படும் கூலி நாளொன்றிற்கு ரூபா ஒன்றேயாகும். இந்த 1 ரூபா விகிதமான கூலி இற்றைக்குச் சில வருடங்கட்குமுன், அதாவது 1916-ம் 17-ம் ஆண்டுகளில் அரிசிப்பஞ்சம் நடந்த காலத்தில், முடி வெட்டிய ஒருபடி அரிசி 75 சதமாக விற்றகாலத்தில் ஏற்பட்டதாகும். இது நிகழ்ந்து 15 வருடங்கட்கு மேற்பட்டும் இன்னமும் வேலைக்காரர் இந்தக் கூலி விகிதத்தை மாத்திரம் இங்கே கைவிடாமலிருக்கின்றார்கள். இக்கூலி விகிதம் சிறிதும் இறங்காமையினால் வயற் செய்கை தோட்டச் செய்கை யென்னுமிவைகளைக் கைக்கொண்டுள்ளவர்களின் செலவு குறையாமலிருப்ப, இங்குள்ள நெல், வைக்கோல், புகையிலை முதலிய தோட்டப் பொருள்களை விலைகுறைத்து விற்றல் முடியாமலிருக்கின்றது. இந்த நாட்கூலி விகிதத்தைச் சிறிதேனுங் குறைத்துவிடலாமென்று ஊரவர்கள், சிற்சில கிராமச்சங்கத்தார் பல முறையும் முயன்றும் அநுகூலமடைந்திலர்; அநுகூலமடையாமைக்குப் பிரதான காரணங்கள் இரண்டு உள்ளன; ஒன்று ஊரவர்களிடத்தில் ஒற்றுமையில்லாமை; இன்னொன்று அரசினரின் பராமுகம். ஊரவர்கள் ஒற்றுமைப்பட்டுக் கூலிக்காரரின் நாட்கூலியில் ஒரு குறித்தவிகிதத்தைக் குறைத்துக் கொடுக்கத் தொடங்கினால் அரசினர் கூலிக்காரருக்குக் கொடுக்குங் கூலி விகிதத்தோடு ஒத்துப் பார்த்து, ஊரவர்கள் கொடுக்குங் குறைந்த கூலிக்கு வேலைசெய்யச் சம்மதிக்கின்றார்களில்லை. உதாரணமாக ஒரு "மேச"னையும் அவனுடன் கூலிவேலை செய்வோரையும் எடுத்துக்கொள்வோம்; அரசினரிடத்துக் குத்தகை யெடுத்துச் செய்யப்படும் கட்டட வேலைக்கு மேசனுக்கு ரூபா 1–75 சதவிகிதமும் உடனின்று வேலைசெய்யும் கூலிக்கு ரூபா 1 விகிதமுங் கொடுத்தால், இந்த மேசனுங் கூலியும் ஊரவர்களிடத்திலும் இந்தவிதமே வாங்க வேண்டுமென்று பிடிவாதஞ் செய்கிறார்கள். இந்த யாழ்ப்பாணத்திலே பட்டினசங்கத்தார் தம்பொறுப்பிற் செய்யுங் கூலிவேலைக்கெல்லாம் ஒரு விகிதத்தைக் குறைக்க, அப்படியே அரசினரின் கூலிவேலைகளிலும் அரசினர் ஒரு விகிதத் [illegible] குறைக்க ஊரவர்களுங் குறைத்தல் முடியும்; இந்த மூன்று பகுதியாருங் குறைத்துக்கொண்டால் கூலிவேலை செய்வோர் நீதியீனமாகக் கூலிவாங்குதல் முடியாது. இங்கே றிக்ஷோ இழுப்பவர்கள் தங்களுடைய கூலியை முன்னைக்காட்டிலும் சிறிது குறைத்துக்கொண்டார்கள்; குதிரை வண்டி, மாட்டுவண்டி, மோட்டார்ரதம், மோட்டார்பஸ் என்னுமிவைகளை வைத்திருப்போர் தங்கள் வண்டிக்கூலிகளைக் குறைத்திருக்கிறார்கள் 100 கிடுகிற்கு 50சத விகிதம் வீடு வேய்ந்தவர்கள் இப்பொழுது 40 சதம் 35 சத விகிதம் வாங்கத் தொடங்கியிருக்கின்றனர். இப்படி ஏனைய கூலிக்காரருக்கும் கூலியைக் குறைத்தாலல்லாமல் சுதேசிப் பொருள்களை விருத்தி பண்ணுவதும் கமமுயற்சி செய்வதும் கஷ்டமேயாகும். மேலும் இந்தக் கூலிக்காரர். அநியாயமாகப் பெறுங் கூலிப்பணத்திற் பெரும்பாகம் இப்பொழுது இங்கே கள்ளுத் தவறணைக்கே போகின்றது. இங்குஞ் சில கிராமங்களில், அக்கிராமச்சங்கத்தவர்களின் முயற்சியினால் கூலி விகிதம் குறைக்கப்பட்டுள்ளதென அறியலானோம். இதனை ஏனைய கிராமச்சங்கத்தினரும் பின்பற்றுதல் வேண்டும். யாழ்ப்பாணப் பட்டினத்திலுள்ள கூலியைக் குறைத்தற்கு இங்குள்ள பட்டினசங்கத்தாரே துணைபுரிதல் வேண்டும். பட்டினசங்கத்தாரும் அரசினரும் இந்த விஷயத்திலே தலையிட்டால் ஊரவர்களும் அப்படிச் செய்தல்முடியும்; இதனால் நாட்டிலுள்ள பணக்கஷ்டம் சிறிது குறைவுறும். ஆதலின் அரசினரும் பட்டின சங்கத்தாரும் இவ்விஷயத்திற் சிறிது ஊக்கங் கொள்வார்களாக.

## நூல்களைப்பற்றியகுறிப்பு.

### கதிர்காமபுராணம் வசனம்.

இருமுருகக்கடவுளின் பாடிவீடென்றசொல்லப்படும் திவ்வியபுராதன க்ஷேத்திரமாகிய கதிர்காமத்தின் மகத்துவத்தை யெடுத்துக் கூறுவது இது வடமொழியிலுள்ள தெட்சண கைலாச மான்மியத்திலிருந்து இலகுவான தமிழ் வசன நடையில் மொழிபெயர்த்தெழுதப் பட்டுள்ளது; இவ்வாறு தமிழ்மக்களுக்குப் பயன்படும்படி இதனைச் செய்தவர் சைவசித்தாந்த சாத்திரங்களை யுணர்ந்தவரும், சைவப்பிரசாரகராயிருந்தவருமாகிய யாழ்ப்பாணத்து வதிரி ஸ்ரீ சி. தமோதரம்பிள்ளை யவர்களாகும் பிரதிகள் அவரது சகோதரரும் வித்துவானுமாகிய ஸ்ரீ நாகலிங்கபிள்ளையவர்களால் இரண்டாம்பதிப்பாக வெளியிடப்பெற்றுள்ளன பிரதியொன்றின் விலைசதம் 50.

### கதிர்காமபுராணம் (செய்யுள்.)

இந்நூல் தெட்சண கைலாச மான்மியம் கதிர்காம புராண வசனம் என்னுமிவைகளை ஆதாரமாகக்கொண்டு மேற்படி வித்துவான் ஸ்ரீ சி நாகலிங்கபிள்ளை யவர்களால் நவமாகப் பாடப்பெற்றுள்ளது. பாக்கள் சொன்னயம் பொருணயம் விரவியுள்ளன பிரதியொன்றின் விலைசதம் 75 (அஞ்சல் 12)

மேற்படி புராணமும் வசனமும் வதிரி ஸ்ரீ சி. நாகலிங்கபிள்ளை யவர்களிடம் பெறற்பாலன.

### கற்பகமலர்-க.

இந்நவீன நூல், சிந்தாமணியென்னுஞ் சிறந்த தமிழ் மாத வெளியீட்டின் ஆசிரியையாகிய ஸ்ரீமதி சகோதரி வி. பாலம்மாளால் சற்போதமயப்பனவாய், வாசிக்க வாசிக்க ரசிப்பனவாய் ஹாசியரசத்தோடு கூடியனவாய், உலக அநுபவத்தை யொட்டியனவாய் (1) விருந்தில் விலக்கு (2) உற்சவம் என்னும் கதைகளைக் கொண்டுள்ளது. இக்கதைகள் ஆண்பாலினர் பெண்பாலினர் என்ற பேதமின்றி எவரும் ஆர்வத்தோடு படிக்கத்தக்கன. பிரதிகள் அழகுற இனிது அச்சிடப்பெற்றுள்ளன; "கற்பகமலர்" என்ற மகுடநாமத்துடன் இன்னோரன்ன இனிய கதைகளை எழுதித் தமிழகத்தார்க்கு இதஞ்செய்ய வேண்டுமென்பதே இச்சகோதரியின் நோக்கமாகும். நமது சகோதரி வெளியிட்டுவரும் இனிய நூல்களை வாங்கி ஆர்வத்துடன் படித்து ஒழுக முயல்வதே சகோதரிக்குத் தமிழகத்தார் செய்யவேண்டிய கைம்மாறாகும். பிரதியொன்றன் விலை உள்நாடுகளுக்கு அணா 3; வெளிநாடுகளுக்கு அணா 4 ஆகும். பிரதிகள், மனேஜர், கல்யாணி புத்தகசாலை, மயிலாப்பூர், சென்னை என்ற மேல்விலாசத்திற் பெற்றுக்கொள்ளலாகும்.

### தமிழ்-சிங்கள முதற்புத்தகம்.

இம்முதற்புத்தகம், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பழைய மாணவரும் புத்தகுருவாசையுமாகிய பலபேசவே ஸ்ரீசுதமன என்பவரால், தமிழர் சிங்களம இலகுவிற் பயில்வதற்கும், சிங்களர் தமிழை இலகுவிற் பயில்வதற்கும் பயன்படும் வண்ணம் எழுதப்பட்டது

எமக்கு அனுப்பிய புத்தகங்களின் பொருட்டு அந்தந்தப் புத்தகங்களின் ஆசிரியர்களுக்கு நன்றி கூறுகின்றேம்,

# சமாசாரத் திரட்டு.

### காலநிலை.

கதிரவன் வெப்பமோ அதிகம்; மழையில்லை அதற்கான அறிகுறிகளும் இல்லை தென்றற்காற்று இடையிடையே வீசுகின்றது.

### மாதகல் மண், கல்.

மாதகற் கடற்கரையிலிருந்து ஒருவரும் கல்லாவது மண்ணாவது எடுக்கப்படாதென்று அரசினர் "கசற்" பத்திரத்திலே விளம்பரம வெளிவந்திருக்கிறது.

### ஆயத்துறை விற்பனவு.

பண்ணைத்துறை, அராலித் துறை, காரைதீவு ஆயக்குத்தை விற்பனவுகள் புரட்டாதிமீ˘ 6உ நடைபெறுமென்று அரசினர் "கசற்"பத்திரத்திலே விளம்பரம் வெளிவந்திருக்கின்றது.

### வடபாகத் தலைமை வித்தியாதரிசி.

யாழ்ப்பாணத்தில் இப்பதவியிலே அமர்ந்திருந்த டக்ரர் J. சண்டிமன் அவர்கள் மத்தியமாகாணத்துக்கும், கொழும்புப்பகுதியில் உத்தியோகம் நடாத்திய மெஸ் W. R. உவாட்சன் B. Sc அவர்கள் வடபாகத்துக்கும் மாற்றப்பெற்றனர்.

### வீடு எரிந்தது.

சென்ற ஆடிமாதம் 7-ம் திகதி (22-7-32)-ல் மண்டதீவு சின்னத்தம்பி-மாணிக்கம் என்பவரின் வீடு அக்கினிபகவானுக்கு இரையாயிற்று காத்திரப்பிரகாரம கைவிளக்கிலிருந்து மேலேதூங்கியதுணியில் தீப்பற்றியதே காரணம்; இதனால் வீட்டுச் சொந்தக்காரனுக்கு நேர்ந்த பொருள் நட்டம் ஏறக்குறைய 2000 ரூபாவாம்

### விவாகம் செய்யாத வாலிபர் நீதிபதி ஸ்தானத்திற்கு ஏற்றவரல்லராம்.

சென்ற 24-ந் தேதி வட இலங்கைத் தொழிலாளர் சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டமொன்று யாழ்ப்பாணம் சுண்டிக்குழியிற் கூடிற்று. அத்தருணம் அநேக நிர்ணயங்கள் நிறைவேற்றப்பட்டன அவைகளுள் ஒன்று, விவாகமாகாது வாலிபராய் உள்ள 'ஸிவில் சேர்விஸ்' உத்தியோகத்தர்களை நீதிபதிகளாக அனுப்புதல் சரியல்லவானபடியால், இது விஷயத்தைப்பற்றிச் சீர்தூக்கிப் பார்த்து சிந்தித்து ஆகவேண்டியனவற்றைச் செய்யுமாறு, இந்நிர்வாகசபை இலங்கைச் சட்ட மந்திரியைக் கேட்டுக் கொள்ளுகிறது.

### தண்ணீர்ப் பஞ்சம்.

மன்னாரிலே நீர்நிலைகளெல்லாவற்றிலும் தண்ணீர் அருகிவிட்டது. இந்தமாசத்தில் மழை பெய்யாவிட்டாற் சென்ற வருடத்தைத் போலவே தண்ணீர்ப் பஞ்சத்தாற் கஷ்டமேற்படுமாம்.

### கொழும்பிற் குற்றங்கள் அதிகப்படுதல்.

சென்ற ஜூன்மாதத்தில் கொழும்பில் 142 பெருங் குற்றங்கள் நடந்திருக்கின்றனவாம். இவற்றில் 75 திருட்டும், 14 கொள்ளையும், 42 பலாத்காரமும், பிற குற்றங்கள் 11 ஆகும்.

### இவனுக்கும் அவனுக்குமுள்ள பேதம்.

சென்றவாரம் மாத்தளைக்கணித்தான ஒரு தோட்டத்திலே வேலைசெய்த அங்கமுத்தன் என்னும் இந்தியக் கூலியொருவன் தன் மனைவி இராமசாமி யென்னுமொருவனுடன் சோரமாக நடந்தாளென்பதையறிந்து தான் சமீபத்திலுள்ள காட்டிற் கயிறிட்டுத் தூங்கி உயிர்விட்டான்.

அந்த வாரத்திலேயே மாத்தளையைச் சேர்ந்த ஒருகிராமத்தில் வசித்த புஞ்சிபண்டா என்னும் சிங்களவன், தன் மனையாள் தாயகத்திலிருந்தவள், தன் வீட்டிற்கு வர மறுத்தமையினாற் சந்தேகங்கொண்டு அவளைக் கத்தியாற் குற்றிக் கொன்றுவிட்டானும்.

### வருமானவரிப் பகுதி நிலைமை.

இலங்கையிற் புதிதாகஏற்படுத்தப்பட்ட வருமானவரியால் சாதாரணகாலங்களில் 2 கோடி ரூபா வருமானம் ஏற்படுமென்றும், இவ்வருஷம் மிகப் பணமுடையான காலமாயிருப்பதால் 70 லட்சம் ரூபாவாவது வருமென்றும் மதிப்பிடப்பட்டது. இப்போது இந்த 70 லட்சம் ரூபாவும் வரமாட்டாதென்றும், 40 லட்சம் ரூபா மட்டுமே கிடைக்குமென்றும் வருமான வரிக் அதிகாரி கூறுகிறார். மேற்படி வருமானவரிப்பகுதி உத்தியோகஸ்தர்களின் செலவே இதிற் பெரும் பகுதியை விழுங்கிவிடும்.

### வயலுக்குள் கஞ்சாச் செடிகள்.

கடகப்பொலையைச் சேர்ந்த புஞ்சிபண்டா, அப்புஹாமி, புஞ்சிருளை என்னும் மூவர் ஓர் வயலுக்குள் கஞ்சாச் செடிகளை மறைவாக உண்டாக்கி வந்தனர் என்று டண்டகமுவாப் பொலிஸ் நீதிஸ்தலத்திற் குற்றம் சாட்டப்பட்டனர். இவர்களைச் சிறையாக்கிய பரிசோதகர், இவர்களால் உண்டாக்கப்பட்ட செடிகள் எனச் சொல்லப்பட்ட 92 கஞ்சாச் செடிகளை நீதிஸ்தலத்திற்கு காட்டினர். முதலாம் எதிரி குற்றத்தை ஒத்துக்கொண்டான். நீதிபதி அவனுக்கு 15ரூபா அபராதம் விதித்து, மற்றைய இருவருக்கும் எதிராகவுள்ள விசாரணையைத் தவணையிட்டார்.

### அன்சாரி-காந்தி சந்திப்பு.

சமீபத்தில் சிறையிலிருந்து வெளிவந்த டாக்ரர் அன்சாரி ஐரோப்பாவுக்குப் பிரயாணமாகுமுன் சிறையிலிருக்கும் மகாத்மாவையும் ஜவகர்லாலையுங் கண்டு பேசுவாரெனத் தெரிகிறது.

### சுதேச சமஸ்தான சுகாதார நிலைமை.

பரோடாவில் சமீபத்தில் சனக்கணக்கு எடுத்தபோது 100 வயதுடைய பிரசைகள் 301 பேர் இருப்பதாகவும் 120 வயதுடைய சாது ஒருவர் இருப்பதாகவும் தெரியவந்தது.

### ஜம்புஸார் தாலுகாவில் நிலம் பறிமுதல்.

நிலவரி செலுத்தாததற்காக ஜம்புஸார் தாலுகாவில் சுமார் 370 ஏக்கர் நிலம் அரசினரால் கைப்பற்றப்பட்டு ஒரு வருஷத்துக்கு விவசாயத்துக்காக வேறு சிலருக்கு வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது.

### இந்தியப் பொலிஸ் அதிகாரி சுடப்பட்டார்.

கொமிலாப்பகுதிப் பொலிஸ் அதிகாரியான மிஸ்ரர் டீ. B. எலிசன் என்பவர் சென்ற வெள்ளிக்கிழமை பிற்பகல் தமது விடுதிக்கு வரும் வழியில் சிலரால் சுடப்பட்டார். இது சம்பந்தமாக இருவர் சந்தேகத்தின் பேரில் சிறையாக்கப்பட்டிருக்கிறார். மிஸ்ரர் எலிசனின் நிலைமை அபாயகரமாயிருக்கின்றது.

### நீதிபதிக்குச் சப்பாத்து எறி.

சென்ற 27-ம் தேதி அலகபாத் நீதிஸ்தலத்தில் நீதிபதி ஒருவனுக்குச் சிறைத் தண்டனை விதிக்கும்போது அவன் தானணிந்திருந்த சப்பாத்தால் அவர் முகத்தில் எறிந்தான். அதிர்ஷ்டவசமாக அச்சப்பாத்து நீதிபதிமீது படவில்லை. மற்றச் சப்பாத்தால் மீண்டும் அவன் எறிய எத்தனிக்கும்போது நீதிஸ்தலத்தில் நின்ற பொலிசார் அவனைச் சிறையிட்டனர்.

### எம் பிரதிநிதிகளும் கவனிப்பாரா!

அமரிக்க தேசத்தலைவரான மிஸ்டர் ஹூவர் தமது வருடச் சம்பளத்தை 75000 டலரிருந்து 60000 டலராகக் குறைத்துக்கொண்டார். அமரிக்க மந்திரசபையாரும் தங்கள் சம்பளங்களை 15000 டலரிருந்து 12750 டலராகக் குறைத்துக் கொண்டனர்.

## இன்னும் மனமில்லையா?

ஜனப்பிரதிநிதிகளின் விஷமத்தனம்.

அடுத்தவருஷத்துவரவுசெலவைச் சரிப்படுத்துவதற்காக, அரசாங்க உத்தியோகஸ்தர்க்கு அவர்கள் இளைப்பாறும்போது மொத்தமாகக் கொடுக்கப்படும் உபகாரப் பணத்தை இனிக் கொடாதொழிப்பதுவனச் சின்னுட்களுக்குமுன் மந்திரசபையார் யோசித்தனர். ஆனால் நமது தேசாதிபதி அத்தகைய யோசனைக்கிடங் கொடுக்கவில்லை. எனவே வரவுசெலவைச் சரிப்படுத்துவதற்கானவழிவகைகளைக் கையாளுமாறு வருகிற செவ்வாய்க் கிழமை (2-8-32) அரசாங்கசபை யங்கத்தவர்களும் மந்திரிகளும் ஓர் மகாநாடு கூடி ஆலோசிப்பார்கள். அரிசிமீது இன்னுந் தீர்வை யேற்றுவது அநேக அங்கத்தவர்களுக்கு விருப்பமானதல்ல எனவே பின்வருவனவற்றுள் ஒன்றை அனுசரிக்கலாமோவென அவர்கள் ஆலோப்பார்கள்.

1. ஜப்பானியபொருள்கள்மீது ஓர் கூடிம தீர்வை.
2. புலனுகர்ச்சிப் பொருள்களின்மீது தீர்வை.
3. கள்வடித்தற்காக மரவரி.
4. மோட்டர்ரதம் வைத்துப் பாவிப்பதற்கான அநுமதிக் கட்டணத்தை உயர்த்துதல்.

இவைகளுள் முதலாவதைக் கைக்கொண்டால் நியாயமான பணவருவாய் உண்டாகும். அத்துடன் பிரிட்டிஷ் பொருள்களுக்குச் சகாயஞ் செய்வதாயும் முடியும்.

இரண்டாவது முறையை அனுட்டித்தால பணவருவாய் உண்டாகுமோ என்பது சந்தேகம்.

மூன்றாவதாக ஓர் மரவரியை ஸ்தாபித்தால் மதுபரிபாலனப் பகுதியை முற்றும் மாற்றி அமைக்கவேண்டும.

நாலாவதாக மோட்டர் ரதங்களின் மீதுள்ள அநுமதிக்கட்டணங்களையுயர்த்தினுல் இருவிதமான நன்மைகள் உண்டு.

a. அரசிறைவருவாய் உண்டாகும்.
b. மோட்டர் ரதத்தின் எதிரிடை குறையவே புகைரதப்பகுதியார்க்கு வருவாய் உண்டாகும்.

ஆனுல் இந்தமுறையையனுசரிப்பதால் வரும வருவாய் அடுத்தவருஷ வரவுசெலவைச் சரிப்படுத்துவதற்குப் போதாததாகும். எனவே இம்முறையோடு வேறு ஏதேனும் வழிகளையும கைக்கொள்ள வேண்டும.

அரசாங்க சபையினின்றும் விலக மனமில்லை.

தேசாதிபதியானவர் ஜனப் பிரதிநிதிகளின் கேள்விகளுக் கிணங்காவிட்டால் அவர்கள அரசாங்கசபையைவிட்டு விலகுவார்களோ என்பது சந்தேகம். கொழும்பிற் பிரசுரமாகும் "ஒப்சேவர்" பத்திரிகையின் பிரதிநிதியொருவருக்கு "இச்சந்தர்ப்பத்தில் நாம் விலகுவது உசிதமல்லவென்றே யான் எண்ணுகிறேன்" என்று ஓர் அங்கத்தவர் கூறினாராம்.

வருடந்தோறும் 4800 ரூபா மிச்சம் பிடிப்பவர்களே வருமானவரி கொடுக்க வேண்டும் என நியதி யிருந்தது. இனி 2400 ரூபா மிச்சம் பிடிப்பவர்களும் வரி கொடுக்கவேண்டுமென்று விதித்தால் அதனுற் பணவருவாய் அதிகமாகுமென்றும் சில அங்கத்தவர்கள் நம்புகிருர்கள்.

## காசியில் 20 ஸ்திரீகள் சிறையாயினர்.

தேசிய மகாசபைத் திட்டப்படி காசியில் பொலிஸார் வசமிருக்கும் ஒரு மகாசபை விடுதியை ஸ்திரீகளும் சிறுவர்களுமாகச் சிலர் சென்று கைப்பற்ற முயற்சித்தனர். அவ்விடுதி பொலிஸ் உத்தியோகத்தர்களால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

தொண்டர்கள் இருவர் ஒருவருக்கும் தெரியாமல் விடுதிக்குள் நுழைந்து கூரைமீது ஏறி தேசியக்கொடியை காட்டிவிட்டு தேசிய கோஷம் செய்தனர். உடனே பொலிஸார் இவர்களைக் கைதுசெய்து கொடியையும் பிடுங்கிக்கொண்டனர். இதோடு சுமார் 20 ஸ்திரீகளும் நான்கு தொண்டர்களும் கைதுசெய்யப்பட்டனர். மகாசபை விடுதிக்கெதிரில் கூடிய ஜனக்கூட்டம் பொலிசாரால் கலைக்கப்பட்டது.

## யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச்சங்கம்.

1932-ம் ஆண்டு மே மாசம் நிகழ்ந்த இச்சங்கத் தமிழ், சம்ஸ்கிருத பரீட்சைகளிற் சித்தியடைந்தோரின் பெயர் முதலியன:-

### தமிழ்ப் பாலபண்டிதபரீட்சை.

2-ம் பிரிவு.

39. கணபதிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை, பருத்தித்துறை.
20. சந்தையா நாகலிங்கம், H. T. M வித்தியாசாலை சுன்னாகம்.
31. பொன்னையா பொன்னம்பலம், மேற்படி வித்தியாசாலை.

3-ம் பிரிவு.

12. பொன்னம்பலம் இரத்தினம், வேலணை கிழக்கு.
18. ஆறுமுகம் பொன்னுத்துரை, சுன்னாகம் பிராசீன பாடசாலை.
29. A. பாவிலுப்பிள்ளை, கொழும்புத்துறை கத்தோலிக்க வித்தியாசாலை.
19. சோமசுந்தரம் பாலசுப்பிரமணியம், நவாலி வடக்கு.
24. கதிரவேலு சுப்பிரமணியம், சிவியாதெரு பார்வதி வித்தியாசாலை.
110. சின்னப்பு சங்கரப்பிள்ளை, கோப்பாய் அரசினர் கலாசாலை.
43. S. கணபதிப்பிள்ளை, குருக்கள்மடம் மட்டக்களப்பு.
11. வேலுப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை, திருக்கோணமலை.
7. G. S. M. வல்லிபுரம், ஸ்ரான்லி வித்தியாசாலை, யாழ்ப்பாணம்.
23. அப்பாக்குட்டி சபாபதிப்பிள்ளை, புங்குடுதீவு.
38. E. சேகராசசேகரம், வதிரி.
9. M. சின்னத்தம்பி, தொண்டமானாறு தமிழ் வித்தியாசாலை.
30. P. ஞானப்பிரகாசம், கொழும்புத்துறை கத்தோலிக்க வித்தியாசாலை.
17. கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை, மட்டுவில்.

பரீட்சையில் நூநசித்தியடைந்தவர்கள் (*Referred Candidates*)

10. K. இராசையா, 4-ம் தொகுதியில் அடுத்தமுறை சித்தியடைய வேண்டியது.
35. A. T. மயில்வாகனம், (அப்படியே)
46. அருளப்பு ஜோன்பிள்ளை, முதலாம் தொகுதியில்.

### தமிழ்ப் பிரவேசபரீட்சை.

90. வைத்தியலிங்கம் பொன்னுத்துமரு, திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலை.
88. கார்த்திகேசு தம்பையா, மேற்படி கலாசாலை.
58. V. இராசசிங்கம், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.
80. சரவணமுத்து அப்புத்துரை, மூளாய்ச் சைவ வித்தியாசாலை.
78. M. பேரம்பலம், நெடுங்குளத்தெரு யாழ்ப்பாணம.
49. U. M. அப்துல்காதர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.
60. A. சின்னத்துரை, மேற்படி கலாசாலை.
62. A. கந்தையா, மேற்படி கலாசாலை.
94. S. துரைசிங்கம், திருநெல்வேலி ஆசிரியர் கலாசாலை.
53. S. பொன்னம்பலம், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.
61. N. T. வேற்பிள்ளை, மேற்படி கலாசாலை
51. V. கந்தையா, மேற்படி கலாசாலை.

### சம்ஸ்கிருத பிரவேசபரீட்சை.

72. S. கார்த்திகேசு ஐயர், சுன்னாகம் பிராசீன பாடசாலை.
73. K. இரத்தினசபாபதி ஐயர், மேற்படி பாடசாலை.

## தேகவியோகம்.

வண்ணார்பண்ணையில், சிறந்த ஆயுர்வேத வைத்தியர்களுள் ஒருவராய் விளங்கிய ஸ்ரீ வை. (டோக்டர்) கந்தையா அவர்கள் தம்மைச் சிலமாசங்களாகப் பீடித்து வருத்திய நோய்காரணமாக, நேற்றுப் பின்னேரம் 5½ மணிவரையில் வண்ணார்பண்ணை மேற்கிலுள்ள தமது முத்தமகளின் இல்லத்தில் மனைவிமக்கள்சுற்றம் சுற்றந்தார்வருந்த ஊரார் ஓலமிட, தமது 52-ம் வயசில் இவ்வுலகவாழ்வை ஒருவினர். இவருடைய ஈமக்கிரியை முதலியன இன்றுபின்னேரம் நடைபெறும். வைத்தியாவர்களின் திறமைகளையும் பிறவற்றையும் அடுத்த பிரசுரத்தில் வெளியிடுவேம்.

## இராமாயணம் ஆரணியகாண்டம்.

1-ம் பக்கத் தொடர்ச்சி.

இரா: மாதே, நீ சொல்வதெல்லாம் விபரீதமாகத் தோற்றுகின்றனவே; இராவணன் தங்கையென்றாய், இப்போழ்தை முனிவரின் ஆசிபாற் பெற்றேனென்றாய், ஆனுல் திரிலோகங்கட்கு மிறைவனென்று நீ சொல்லும் இராவணனுக்குத் தங்கையாகவுள்ள நீ கடிமணஞ்செய்யாக் கன்னிகையாகிய நீ, சேடியர் பணிப்பெண்கள் மெய்காப்பாளர் முதலாம் அரசியர்க்குரிய வரிசைகளின்றி, நவரத்தின சகிதமான விமானத்தில் இவர்ந்து வருதலின்றி ஏழைமகளிர்போல தன்னந்தனியே இக்கானகத்தின் கண்ணே வந்தமைக்குக் காரணமென்ன?

சூர்ப்ப: உத்தமரே, துன்மார்க்கங் களாகிய இராக்கதர்களைத் துறந்து சன்மார்க்கர்களாகிய முனிவர்களையும் தேவர்களையும் அடுத்து நான் வாழ்கின்றேனென்பதை முன்னமே உமக்குப் பன்னியுள்ளேன்; இப்பஞ்சவடியிலுள்ள முனிவர்களைத் தரிசித்து அவர்களுக்குக் குற்றேவல் செய்யும் பாக்கியம் பெற்ற நான், உம்மையுந் தரிசித்து உமது தயவைப்பெற்றுச் செல்லலாமென நோக்கங் கொண்டு இங்கே வந்தேன்; இதுவே என் மனக்கிடக்கை.

இரா: பெண்ணே, தமக்குரியவரல்லா மகளிரோடு வார்த்தையாடுவதாற் பெரிதும்வருவது அநர்த்தமேயாகும், நீ இங்கே எம்மிடம் வந்தகாரணத்தை உள்ளபடி எடுத்துச் சொல்லுதி என்னுல் இயலுமானுற் செய்வேன். நானும் நீயும் ஏகாந்தமாக வார்த்தையாடுதல் அழகல்ல.

சூர்ப்: (சிறிதுநேரம் மௌனமாய் நின்று நாணமுற்றாள்போல் நடித்து) அரசே, சொல்லுகின்றேன்.

"தாமுறுகாமத்தன்மைதாங்களேயுரைப்பதென்ப, தாமெனலாவதன்றாலருங்குலமகளிர்க்கம்மா, வேமுறமுயிர்க்குநோவேனென்செய்கேன்யாருமில்லேன், காமனென்றொருவன்செய்யும் வன்மையைக்காத்தி ஐயா."

(வரும்.)

## தமிழாசிரியர்களின் புத்துணர்ச்சி.

ஐயா,

சில தினங்கட்கு முன் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் *Dr. Ian Sandeman* அவர்கட்கு பிரியாவிடை கூறுதற்காகக் கூடிய வடஇலங்கைத் தமிழாசிரியர் சங்கக் கூட்டமொன்றில் ஓராசிரியர் தமிழ்வித்தியாதரிசிகள் சிலரின் கல்விக்குறைவையும், அதனப்போக்கையும், அறியாத விஷயங்களிற் செய்யும் ஆரவாரங்களையும் எடுத்துக் காட்டியதன் பயனுய்த் தமிழாசிரியர் உலகத்தில் ஒரு புத்துணர்ச்சியுண்டாயிருப்பது மெச்சத்தக்கது. இவ்வுணர்ச்சி அவரவர் மனோபாவத்துக் கேற்ப வேறுபடுவது சகசந்தானே. அடிப்பட்ட தமிழாசிரியர்கள் சிலர் மேற்குறித்த ஆசிரியர் வித்தியாதரிசிகளின் மனத்தைப் புண்படுத்தி விட்டாரென்று, அதற்குத் தக்க பிராயச்சித்தம் செய்யும் நோக்கமாக ஒரு அவசரகூட்டம் கூடுதற்குத் தங்கள் சகோதர ஆசிரியர்களைக் கெஞ்சித் திரிகின்றார்களாம்; வாலிப ஆசிரியர் வேறேமேற்குறித்த ஆசிரியர் தமிழாசிரியர் உலகம் வெளிப்படுத்த மாட்டாது நெடுங் காலம் தியங்கிக் கொண்டிருந்த குறைகளைத் திறமையோடும் எடுத்துக் காட்டியதற்காகக் கூட்டங் கூடி நன்றி கூறுவதற்கு முயற்சிக்கின்றார்களாம். உலகம் பலவித மல்லவா! (நடிக)

## சமயபாட போதனை.

[போதகாசிரியர் ஸ்ரீமத். சுவாமி பரிபூரணுநந்தர் அவர்கள்.]

மட்டக்களப்புக் கல்லடி உப்போடை சிவானந்த ஆங்கில வித்தியாலய மண்டபத்தில் 29-7-32 தொடக்கம் வெள்ளிக்கிழமைகள் தோறும் மாலை ஆறுமணிக்கு இடி பாடம் நடைபெறும்.

நம் இந்து சமயத்தில் ஆறுவகைத்தான தர்சனங்களுள. அவையாவன: சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், பூர்வமீமாம்சை, உத்தரமீமாம்சை என்பன. முதற்கணுச்ச சாங்கிய தர்சன ஆசிரியர் கபிலர் ஆவர். மற்றைய தர்சனங்களை முறையே, பதஞ்சலி, கௌதமர், கணுதர், ஜைமினி, வியாசர் என்ற மஹாரிஷிகளியற்றினர். இங்கிகாட்டிய ஆறு தர்சனங்களுள் முதலாவதான சாங்கியத்தை நமது சுவாமிஜீ தொடங்குகின்ருர். சாங்கிய முறைக்கும் கணுதர் முதலியோர் ஆஸ்திகத்துக்கும் முரண்பாடுகளுண்டு. ஆனுலும் ஒருவன், முடிவான சித்தாந்தமான உபநிஷத்துமார்க்கப்படி பொருளை நிர்ணயஞ் செய்தற்கு இவ்வாறு தர்சனங்களின் முடிபுகளையும் மாறுபாடுகளையும் அறிந்துகொள்ள வேண்டியது அத்தியாவசியகமாகும்.

வேதாந்த சித்தாந்த முடிபுகளை அறியவிரும்பும் ஒவ்வொருவரும் மேற்படி நூல்களையும் ஆகமங்களையும் முறையே கற்றல்வேண்டும். பின்

கேட்டும் சிந்தித்தும் அதன்படி ஒழுகியும் கா[...] வேண்டும். நம் இந்து சாஸ்திரங்களில் ஒ[...] எழுத்தத்தானும் அறியாதார் அநேகர் தெரி[...] வர்போல் நடித்து 'வேதாந்தி நான் சித்தாந்தி[...] என வீண் குதர்க்கம் செய்யும் இக்காலத்து[...] ஆன்மாக்கு ஆஸ்திகர் அனைவரும் இத்தகை[...] முறைப்படி பாடங்களைக் கேட்பாரானுல் வீ[...] பிணக்குகள் தீர்ந்து பேரின்ப மடைவரென்[...] பதில் ஐயமில்லை.

இங்ஙனம்,
பண்டிதர். ச. கணபதிப்பிள்ளை,


### காணிவிற்பனவு.

றயில்வே குட்செட்டுக்குச் சமீப[...] ஸ்ரான்லி றேட்டில் 3 பரப்புக்காணி வி[...] நியமித்திருப்பதால், தேவையுள்ளவர்[...] என்னிடம் அதைப்பற்றிய விபரமெல்ல[...] அறிந்துகொள்ளலாம்.

முத்தையா-ஆசைப்பிள்ளை,
பிறக்கி[...]

(*Mis 556 1&4&8th*)

COMMISSION SALE.

### விற்பனவு விளம்பர[...]

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு
வழக்கு இலக்கம் 153[...]

வழக்காளி:-வல்வெட்டி, தற்காலம் சிங்[...] பூரிலிருக்கும் ஆறுமுகம் பெ[...]ன்னையாவின் தத்துவகார[...]கிய வல்வெட்டி சின்னத்தம்[...] தம்பாபிள்ளை.

எதிரிகள்:-
1. வல்வெட்டித்துறைபொ[...]னம்பலம் திருச்சிற்றம்பல[...]
2. டிெ யூர் பொன்னபல[...] துரைசாமி
3. டிெ யூர் திருச்சிற்றம்பல[...] கதிரவேற்பிள்ளை
4. காலஞ்சென்ற பொன்ன[...]பலம் கைம்பெண் அன்ன[...] பிள்ளையின் தத்துவகார[...]கிய வல்வெட்டி சின்ன[...] தம்பி தம்பாபிள்ளை.

மேற்குறித்த இலக்கவழக்கில் தீர்[...] தீர்வைபின்படியும், குறித்த கோட்டி[...] உத்தரவுப்படியும் இதன்கீழ்க்காணு[...] ஆதனங்கள் 1932-ம் ஆ. ஆவணிமீ 20[...] திங்கட்கிழமை பிற்பகல் மூன்றுமண[...] தொடக்கம் குறித்த ஆதனங்களிடமா[...] விருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் வி[...]கப்படும்.

ஆதனங்கள்.

1. தனக்காரகுறிச்சி கொட்டைப்பனை நில[...] பரப்பு 32¼ இதன் தெற்கவாரசியில் வடக்கு[...] புறமாக நிலப்பரப்பு 11. இதில் வடக்குப்[...] கத்தில் குளி 11¾ பிறநீங்கலாக மீதம் நில[...] பரப்பு 10 குளி 6¾க்கு எல்லை கிழக்கு இத[...] கீழ்க்காணும் இரண்டாம் ஆதனம். வடக்[...] எதிரிகளுக்குரிய ஆதனம். மேற்கு வெ[...] தரை, தெற்கு அய்யாமுத்துபெண் தங்கத்தி[...] கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இவ்வெல்லை[...] குட்பட்ட சகலதும் முழு ஆதனத்தின் வட[...] சவாரசியிலிருக்கும் கிணற்றிலும் சோர்தம்[...] வடக்கு என்னும் ஆதனத்திலிருக்கும் கிணற்[...] லும் இதற்குரிய பங்கும் வழிவாய்க்காலுரித்து[...] $A\frac{176}{82}$ம் இலக்கத்திற் பதிவுசெய்யப்பட்டது.

2. டிெ குறிச்சி கொட்டைப்பனையும், தொ[...] றன் ஒல்லையும் நிலப்பரப்பு 9, குளி8$\frac{151}{160}$. எல்[...] கிழக்கும் வடக்கும் ஒழுங்கை, மேற்கு மே[...] குறித்த முதலாம் ஆதனமும், எதிரிகளுக்கு[...] மறுபேருக்குமுரிய ஆதனமும். தெற்கு அய்ய[...] முத்தபெண் தங்கத்திற்கும் மறுபேருக்குமுரி[...] ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் வா[...] பயிர் செய்பயிர் கிணறு அடங்கலும், சோர்த[...] வைவடக்கு என்னும் ஆதனத்திலிருந்து கிண[...] தில் இதற்குரிய பங்கும் வழிவாய்க்காலுரி[...] தும் $A\frac{176}{82}$ம் இலக்கத்திற் பதிவுசெய்யப்ப[...] டது

குறிப்பு. குறித்த ஆதனங்கள் 1929ம்ஆ[...] தைமீ 5உ முடிந்த ஈட்டுறுதியால் ரூப[...] 2000க்கும் அதற்கு வருடமொன்றுக்கு நூ[...] றுக்குப் பத்துவீத வட்டிக்குமாக அல்வா[...] வடக்கு எஸ். பீ. முருகுப்பிள்ளைக்கு முதல[...] மீடாகவும்,

1929ம் ஆ. தைமீ 22உ முடிந்த ஈட்டுற[...] யால் ரூபா 1750க்கும் அதற்கு வருடமொ[...] றுக்கு நூற்றுக்குப் பத்துவீதம் வட்டிக்குமா[...] அல்வாய்வடக்கு குறித்த எஸ். பீ. முருகு[...] பிள்ளை இரண்டாமீடாகவும் கட்டுப்படுத்த[...] பட்டிருக்கிறது.

வி. முதலியார், தழைந்தைவேலு,
கொம்மிசனர்.

பருத்தித்துறை,
18-7-32,
(*Mis.* 554 1)

### மலையாளம் சில்க்.

2½-வீதி 5-நீளம் பட்டு 1-க்கு ரூ.1-8-0
டிெ கம்பிக்கரை டசன் 1-க்கு ரூ. 15
3-வீதி 8-நீளம் வேஷ்டி 1-க்கு ரூ 3-8-0

S. K. R, வீவிங் பாய்க்டரி,
(Y. 30.) கோட்டார், திருவிதாங்கூர்.

## SUMMONS TO DEFENDANT.
### எதிரிக்கட்டளை.

பருத்தித்துறைரெக்குவஸ்துக்கோட்டில்,
வல்வெட்டி:-முருகர் கந்தையா,
இல. 25666. வழக்காளி.
எதிராக
வல்வெட்டித்துறை:- [தும்
1. வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளை சின்ன
2. மாணிக்கம் சிவசுந்தரமும்
3. பெண்யோகாம்பிகையும எதிரிகள்,

மேற்குறித்த 2-ம் எதிரிக்கு:
மேற்சொல்லிய வழக்காளி தனக்கு 1-ம் எதிரி 1926-ம்ஆ ஆடிமீ 14௨ ரூபா 150க்கு 100க்கு 16 வீத வட்டிக்கு மெழுதிக்கொடுத்த ஈட்டின்பேரால் போகவேண்டிய முதலும் மிகுதி வட்டியும் ரூபா 250-40க்கும் மேல் வட்டிக்கும் கோட்டுச்செலவுக்குமாக இக்கோட்டில் ஒரு வழக்குத்தொடர்ந்திருக்கிறார்.

ஈட்டிற்சொல்லிய காணியில் அரைவாசியை சீதனம்வாங்கியதால் 3-ம் எதிரியையும் நீர் 3-ம் எதிரியின் புருஷனாகையால் உம்மையும் எதிரிகளாக்கப்பட்டிருக்கின்றது.

குறித்த தொடர்ச்சியைப்பற்றி மறுமொழி சொல்லும்படி 1932-ம் ஆ ஆவணிமீ 8௨ முற்பகல் 9 மணிக்கு இந்தக்கோட்டில் நீர் நேரே அல்லது தரணிமூலமாக வெளிப்படுவீராக. அவ்வண்ணம்வெளிப்படாவிட்டால்உம்முடைய சமுகமின்றி வழக்கு விசாரித்து தீர்மானிக்கப்படுமென்றறிந்து கொள்ளவும்.

1932ஆ ஆடிமீ 25௨
கோட்டுக்கட்டளைப்படி,
(Sd) V. KATIRKAMATAMBY,
சக்கிடுத்தார்.

(O 375. 1th)

### ஸ்ரீ ராமநாத
### ஆசிரிய பயிற்சிக்கழகம்.

இக்கழகத்திற்குரிய பிரவேச பரீக்ஷை நிகழும் ஆங்கிரசஹு ஆடிமீ 22-ந்தேதிக்குச் சரியான 1932-ம்ஆ ஆக்கஸ்ட்மீ 6௨ சனிக்கிழமை காலை 9 மணிக்கு இப்பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

ஆசிரிய முதலாம் வருட வகுப்பிற் சேர விரும்பும் ஒவ்வொரு மாணவியும் 17 வயது நிரம்பியவராகவும் ஆசிரியபிரவேச (பிறிலிம்) வகுப்பிற் சித்திபெய்தியவராகவும் இருத்தல் வேண்டும்.

இவர் தமது மனுப்பத்திரத்தை இப்பாடசாலை அதிபர் லேடி இராமநாதனாவர்கள் விலாசத்திற்கு ஆக்கஸ்ட்மீ 3-ந் தேதிக்குப் பிந்தாமல் அனுப்பிவைத்தல் வேண்டும்.

R. L. Ramanathan,
Manager
19th July 1932.

(Mis 546. 21, 28, 1)



தங்க மெடல்கள் பெற்ற
ஐரோப்பிய மதுரைக் கம்பனியாரால்
செய்யப்படும்,
திறமான குடை அடையாளமுள்ள
### கொழுக்கி ஓடுகள்.

மதுரைக் கம்பனியார் சிறந்த குடை அடையாளமிட்டு இந்த ஓடுகளை வெகு பணிக்காய் அமைத்திருக்கிறார்கள். வெயில், மழை, செருப்புக்கு இதிலும் மேலான பாதுகாப்பு உபகாரணம் வேறொன்றில்லை. பல தொழில் நிபுணரின் பரிசோதனையால் இதன் இயற்கை மெச்சப்பட்டது இதுவரை 10 தங்கமெடல் பரிசுக்குக் கம்பனியாரைத் தகுதியுடையவராக்கிப்புகழ்பெற்றது மிகஇலேசானது, மலிவானது; ஒவ்வொரு ஓட்டிலும்குடை அடையாளம் விளங்கும். காங்கேசன் துறையிலே கவர்மெண்ட் கட்டப்படும் அரசினரின் சுகஸ்தான கட்டடங்களுக்கென இக்குடை அடையாளமுள்ள 55,000 ஓடுகள பாவிக்கப்பட்டிருக்கின்றன.

! இந்த இனத்திலே கண்ணாடி ஓடுகளுமுண்டு.

ஜே. செருபிம் அன்ட் பிறதர்,
ஏசண்டர், பெரியதெரு, யாழ்ப்பாணம்.

(Y 29 1 5 to 30-4-33)

## அடைவுகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8 ம் இலக்கச் சட்டமாச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்ற அடைவு பிடிக்கும் திரிகோணமலை 6 ம் நெம்பர் காசுக்கடை வீதி முருகுப்பிள்ளை தாமோதரம்பிள்ளை ம் இராசலிங்கம் என்பவர்களிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12 ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1931-ம்ஆ 1 ம் மாதம்.

| இல. | தி. | ரூ | ச. | நகைகளின் விபரம் |
|---|---|---|---|---|
| 33 9 | 1 | 65 | | முலிபத முறிச்சுக்குத்தி அட்டியல் 1 |
| 3329 | 2 | 8 | | வட கடுக்கன் 4 |
| 3345 | 3 | 15 | | பூசாக்கிரம் பின்னுடன் வெ மணி 9 பழுத |
| 3346 | ,, | 14 | 50 | வெ அடுக்குக்காப்பு சோடி 1 ச இ |
| 3405 | 5 | 8 | | சிறு பூசாக்கிரமுடன் மணி 8, பொன் கொப்புச்சிமிக்கி சோடி 1 சிமிக்கி 1 இல்லை |
| 3448 | 6 | 6 | | பொன் தோடு சோடி 1 |
| 3449 | ,, | 7 | | இ கல் முகப்பு சோடி 1 |
| 3450 | ,, | 6 | | வெ முத்துக்கறணை சோ 1 |
| 3464 | 7 | 50 | | சொலிசுக்காப்பு சோடி 1 பழுத |
| 3518 | 9 | 13 | | பென்சோர்க்கி 1 |
| 3538 | 10 | 10 | | இ கல் கவுந்தோர் 1 |
| 3550 | ,, | 45 | | முறிச்சுக்குத்திஅட்டியல் 1 |
| 3552 | ,, | 6 | | கொப்புசிமிக்கி சோடி 1 |
| 3555 | ,, | 12 | | இ கல் பதக்கம்1 கல் விழு |
| 3646 | 13 | 10 | | இதட்பூ 1 |
| 3659 | ,, | 12 | | வெ அடுக்குக்காப்பு சோடி 1 ச இ |
| 3692 | 15 | 20 | | நசியல் பூசாக்கிரமுடன் பலவித மணி 10 |
| 3696 | ,, | 14 | | கடு 1 நசியல் |
| 3740 | 18 | 6 | | டைமன் கொப்புச்சிமிக்கி சோடி 1 |
| 3747 | ,, | 47 | | பட்டணக்காப்பு சோடி 1 |
| 3894 | 19 | 10 | | தகை மோதிரம் 1 |
| 3808 | ,, | 7 | | குலை அரைப்பவுண் 1 |
| 3812 | ,, | 8 | 04 | பொன் பத சிறு பொன் சறடு 1 |
| 3835 | 20 | 6 | | வெ குழற்காப்பு சோடி 1 |
| 3846 | 20 | 12 | | இ கல் கவுந்தோர் 1 |
| 3872 | 21 | 6 | | சிறுஇமிற்தோடு1 கல்விழு |
| 3885 | 22 | 10 | | வெ அடுக்குக்காப்பு சோ 1 |
| 3957 | 25 | 10 | | இதட்பூ 1, வெ தகடு இல்லை மோதிரம் 1 |
| 3977 | 26 | 10 | | குவளை சோடி 1 ச இ |
| 3983 | ,, | 10 | | கொப்புசிமிக்கி சோடி 1 |
| 3986 | ,, | 15 | | உட்கட்டு 1க்கு தட்டு 3 ஏ இல்லை |
| 3997 | ,, | 30 | | அலுக்குத்த 21 |
| 4042 | 28 | 6 | | பேலிடு சோடி 1 |
| 4 44 | ,, | 6 | | பேலிடு சோடி 1 |
| 4084 | 30 | 45 | | பீலிக்காப்பு சோடி 1 ச இ |
| 2-ம் மாதம் | | | | |
| 4 35 | 1 | 12 | | செருகுதோடு சோடி 1, பொன் கடு 1, அரும்பு மணிக்கோர்வை 1 பி இ |
| 4 37 | ,, | 10 | | இமிர்கல் தோடு சோடி 1 கல் வி |
| 4160 | 2 | 6 | 50 | சிறு செவ்வந்திப்பூத்தோடு சோடி 1 |
| 4182 | 3 | 7 | | பழுதான தண்டை சோ 1 |
| 42 9 | 5 | 11 | | வளையல் 8 |
| 4227 | ,, | 14 | | பூசாக்கிரம் 1 |
| 4245 | 6 | 6 | | வெ குழற்காப்பு சோடி 1 ச இ பழுத |
| 43 5 | 8 | 8 | | கொப்புசிமிக்கி சோடி 1 மு வி |
| 4317 | ,, | 10 | | வெ குழற்காப்பு சோடி 1 ச இ |
| 4373 | 11 | 9 | | பொன் காதப்பூ சோடி 1 வெ அடுக்குக்காப்புசோடி 1 |
| 4411 | 13 | 15 | | பூசாக்கிரமுடன் சின மணி 2, வெள் மணி 2 |
| 4501 | 16 | 9 | | சிறு தங்கக்காப்பு 1 |
| 4512 | 17 | 30 | | பூசாக்கிரமுடன் மணி4 நசி |
| 4513 | ,, | 13 | | வெ அடுக்குக்காப்பு சோ 1 |
| 4668 | 25 | 13 | | செடிவைசக பவுண் 1 |
| 4738 | 28 | 70 | | செட்டிப்பூரான் அட்டியல் 1 |
| 3-ம் மாதம் | | | | |
| 4745 | 1 | 16 | | சிறு தங்கக்காப்பு சோடி 1 பூ இ |
| 4760 | ,, | 35 | | பீலிக்காப்பு சோடி 1 நசி ச 1 இ, செருகுதோடு சோடி 1 |
| 4781 | 2 | 22 | | பூசாக்கிரமுடன் மணி 4 |
| 4793 | 3 | 30 | | விரல் படக்கர் 2 முத்து மோதிரம்1, சிறு இதட்பூ1, எஸ்கறணை சோடி 1 |
| 4794 | ,, | 27 | | இ புரோச் 1, (கம்பிகுறை) தங்கமோதிரம் 1, விரல் படக்கர் 1 |
| 4830 | 5 | 15 | | இ கவுந்தோர் 1 |
| 4840 | ,, | 10 | 04 | இ கல் S மோதிரம் 1 |
| 4969 | 14 | 10 | | தங்க மோதிரம் 1 |
| 5020 | 16 | 12 | | தகடுடன் கடு 1 கல் 1 இ நசியல் |
| 5054 | 18 | 9 | | சிறு தங்கக்காப்பு சோடி 1 பூ இ |
| 5068 | 19 | 10 | | பி இ சிறு மணிக்கோர்வை 1க்கு மணி 29 |
| 5117 | 22 | 6 | | சிறு இமிற்தோடு சோடி 1 |
| 5149 | 25 | 6 | | வெ எஸ்கறணை சோடி 1 |
| 5215 | 29 | 15 | 04 | வெ பாதசரம் சோடி1 பழு |
| 5242 | 30 | 13 | | இ கல் கவுந்தோர் 1 |
| 5253 | 31 | 9 | | முறுக்கு மோதிரம் 1 |
| 4-ம் மாதம் | | | | |
| 5294 | 8 | 9 | 50 | பி இ மணிக்கோர்வை1க்கு மணி 28, பொன் காதப்பூ சோடி 1 ச இ, அறுக்கியா சோடி 1, எஸ் கறணை சோடி 1 |
| 5299 | ,, | 20 | | மோதிரம் 4, இ கல் மோதிரம் 1. முத்துமோதிரம் 1 |
| 5308 | 4 | 13 | | பூசாக்கிரமுடன் மணி 12 |
| 5309 | ,, | 12 | | பொற்சறடு 1 |
| 5311 | ,, | 7 | | வெ குழற்காப்பு சோடி 1 |
| 53 3 | ,, | 7 | | சிறு செவ்வந்தித் தோடு சோடி 1 |
| 5347 | 5 | 30 | 04 | பொன் சம்புரதவளையல் 2 |
| 5351 | ,, | 6 | 04 | அரும்புமணிக்கோர்வை 1, தேர்க்குச்சு சோடி 1 |
| 5370 | 6 | 10 | | பத சவுக்கமணிக்கோர்வை 1க்கு மணி 21 பழுத |
| 5432 | 8 | 15 | 04 | இ கவுந்தோர் 1 கல் விழு, இலைப்புரோச் 1 |
| 5433 | ,, | 9 | 04 | தங்கக்காப்பு 1 |
| 5441 | ,, | 60 | | அரைப்பவுண்9-ம் பிறந்த ஐந்திலொருபவுண் 2-ம் சிறு சங்கிக்காசு1-ம் கோர்த்த பொன் சங்கிலி 1 கொ இ, இதட்பூ 1 |
| 5472 | 9 | 40 | 04 | சிறு வைரசங்கிலி 1, தங்கச் சங்கிலி 1 |
| 5478 | 10 | 10 | | சிறு இமிற் தோடு சோடி1 |
| 5542 | 13 | 15 | | பூசாக்கிரமுடன் மணி 2 சவுக்கமணி 9 |
| 5547 | ,, | 13 | 04 | அக்கமுடன் இலைப் புரோச் 1 |
| 5557 | ,, | 17 | | அடுக்குக்காப்பு சோடி 1, வெ குழற்காப்பு சோடி 1 |
| 5563 | ,, | 9 | | தங்கமோதிரம் |
| 5611 | 17 | 16 | | பொத்தான் அரைப்பவுண் 3 குண்டு 1 செம்பு |
| 5649 | 20 | 20 | | சவுக்கமணிக்கோர்வை 1ல் பலவித மணி 28 பி இ, சிறு மணிக்கோர்வை 1ல் மணி 30, சிறு தண்டை சோடி 1 |
| 5665 | ,, | 20 | | அரைப்பவுண் 2, குண்டு வைத்த அரைப்பவுண் 2 |
| 5683 | 21 | 40 | | பூரானட்டியல் 1 |
| 5756 | 26 | 12 | | இமிற்காதோலை சோடி 1 |
| 5759 | ,, | 20 | | பூசாக்கிரம் பலவிதமணி12 |
| 5790 | 27 | 7 | | சிகப்புக்கடுக்கன் சோடி 1 |
| 5890 | ,, | 6 | 50 | இ சிறு தோடு சோடி 1 |
| 5826 | 29 | 10 | | இ கல் கவுந்தோர் 1 |


விற்பனவு:—ஆங்கிரசவருஷம் ஆடி மாதம் 29 ந் திகதிக்குச் சரியான (13 8 32) சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் ஏற்பட்ட நகை பிறகேலாத மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

வி. பொ விசுவநாதஉடையார்,
கெத்தின்மேஸ்தர்,
திரிகோணமலை.

(Mis. 549. 28—1-8 32)

இக்காலத்தில்
## லிட்டில்ஸ்
## ஒறியண்டல்பாம்

இருமடங்கு
சுகந்தரும்




உபயோகிப்பதால்
இருமடங்கு சுகம்
உண்டாகிறது.
இதனைப் பூசுவதனால்
உடம்பிலுள்ள வலிப்புகள்
நோவுகள் சம்பந்தமான
எல்லாவற்றிற்கும்
சுகம் அளிக்கின்றது.
தேகத்துட்புறத்தில்,
இந்தியாவிலே
இந்தியர்களாலே
செய்யப்பட்டதென்பதை
உணரும்போது
மனத்திற்குப் பெரும்
ஆறுதலாக இருக்கின்றது.

(Y. 24. 11-2-32—10-2-33)

## கவுண்மேந்துக்
### கொந்திறாத்துக்குக் கொடுபடும்
## கொளுக்கி ஓடுகள்.

மோர்கன், நட்சத்திரம், 14 இஞ்சுப்பக்கா ஓடு முதலியன அடைமழைக்குங் கசியாது; அண்டப்பார்த்தாப்போலக் கூரையில் அடிக்கலாம். பாரங்குறைவு, பெலனதிகம்; நல்ல அழுத்தமான இந்த ஓடுகள் 125 போட்டால், மற்ற ஓடுகள் 150 போடுகிற இடத்தை மூடும்.

பூ, சிங்கத்தலை, மயிலிறகு விசிறி, பூச்செடி, கலசமுடி, கோபுரமுடி முதலிய அழகான முகட்டோடுகளும், கண்ணாடி ஓடு, காற்றோடு, விசாலமான வெளிச்ச ஓடு, அலங்காரமான சிறுதூண் கல்லுகளும, தழிவிசைக் கல்லுகளும்.

யாழ்ப்பாண நகர், கிட்டங்கித்தெரு
**316-ம் நம்பர்** ஓட்டுச்சாலையிற்
பெற்றுக்கொள்ளலாம்.

Y 28. 31/5.

## உயர்தரமான தமிழ் நூல்கள்!

(1) தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு மெய்கண்ட விருத்தியுரையுடன் ரூ. 4. (2) பட்டினத்துப்பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளிய பிரபந்தத்திரட்டின் விருத்தியுரை ரூ. 3½. (3) திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், தெளிபொருள் விளக்கப் பதவுரையும், விசேஷக்குறிப்புகளுடன் ரூ. 4. (4) விநோதரசமஞ்சரி ரூ. 2. (5) அராபிக்கதை ரூ. 2½. (6) பழமொழியகராதி ரூ. 3. (7) ஆத்திசூடிப்புராணம் ரூ. 2. (8) கல்லாடம் மூலமும உரையும் ரூ. 3. (9) நாலடியார் ரூ. 2. (10) நைடதம் மூலமும் விருத்தியுரையும் ரூ 4. (11) ராமகிருஷ்ணபரமஹம்ஸர் விரிவான சரித்திரம் ரூ. 3.

தமிழ்புத்தகவியாட்லாத்
→ இனம் ←
ஒற்றுமை ஆபீஸ்.
2. சைதாப்பேட்டை, மதருஸ்.

ஒற்றுமை ஆபீஸ், சைதாப்பேட்டை, மதராஸ்.

(Y. 17. 7-9—8-9-3.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

Printed & published by S. ADCHALINGAM, residing at Ayanarkovilady, Van: West Jaffna, ..for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna.